RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1417

# காலக்கனவு - நவீனநாடகம் எடுத்துரைக்கும் பெண் விடுதலை அரசியல்

ந. உமாதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்-624302, தமிழ்நாடு, இந்தியா.

# Women Liberation Politics Explained in Kaalakkanavu – Modern Drama

N. Umadevi [a, *]

[a] Department of Tamil, Gandhigram Rural Deemed to be University, Gandhigram, Dindigul–624302, Tamil Nadu, India

* Corresponding Author: umabaskar12@gmail.com

Received: 25-12-2021
Revised: 01-09-2022
Accepted: 12-09-2022
Published: 29-11-2022

Check for updates

## ABSTRACT

Ideas like Women's Liberation, Women's rights, Women's Development, Feminism, Women's Law, Equality for women, resistance against male chauvinism are sounding all over the world. Women are voicing everyday to attain her independent space. But her voices are chocked by male chauvinistic voices. Even after all her voices for liberation, her revolutionary history has been denied and dissembled. Women's history of liberation has been constructed by men here. Periyarist and Feminist researcher V. Geetha has collected Women's history and she has written this as a play under the title of "KAALAKKANAVU". Professor A. Mangai direct this play and she published this text as a book. This research paper has been pertaining to women liberation thoughts highlighted in this kaalakkanavu modern Drama.

**Keywords:** Women's Liberation, Women's Rights, Feminism, Male chavunism, Equality for women

## முன்னுரை

நவீனயுகத்தின் உச்சகட்ட வளர்ச்சியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நம் அனைவரின் கைகளிலும் நம்மிடமிருந்துப் பிரிக்க இயலாதபடி அலைபேசி, நம் சிறிய கைகளுக்குள் உலகத்தை அடக்கியுள்ளோம். எங்கும் செல்லத் தேவையில்லை நம்சிறு விரல்கள் தீண்டினால் அனைத்துத் தகவல்களும் உள்ளங்கையில். நவீன உலகத்தில் அறிவியல் வளர்ச்சி இவ்வாறு மிகத் தீவிரமாய் இருக்க, சமூகவளர்ச்சி மிகமிகப் பின்னோக்கியதாக உள்ளது. உணவு முறைகள் உட்பட வாழ்க்கை முறைகள் பலவற்றிலும் பழமையைத் தேடும் நாம். பெண்கள் குறித்த கருத்தாக்கத்திலும் பழமையை நோக்கி செல்கிறோம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. 'முன்னோர்கள் முட்டாள் இல்லை' என்ற வாசகம் நவீன ஊடகங்களின் வாயிலாகத் திரும்பத் திரும்ப முன்னிறுத்தப்படுகிறது. இவ்வாசகம் பெண்கள் விசயத்தில் மீண்டும் வேறோர் பெண்ணடிமைத் தனத்திற்கே இட்டுச் செல்கிறது. இவ்வூடகங்களில் பெண் குறித்த நகையாடல்கள் அதிகமாக உலவுகின்றன. அவை பெண்ணுக்கும் அனுப்பப்படுகின்றன. நகைப்புக்கு உரியது தானே என்று அவர்களைச் சிந்திக்கவைத்து, சிரிக்கவைத்து மறைமுகப் பெண்ணடிமை தனத்திற்கு வித்திடுகின்றன. சமூகத்தின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் பெண்ணே காரணமானவள் என்ற சித்தாந்த கருத்துக்கள் கூறப்படுகின்றன. இந்த சமூகத்தில் பெண்தான் திருந்த வேண்டும். ஆண்திருந்த வேண்டிய காரணமோ தேவையோ இங்கு இல்லை. நவீன ஊடகங்கள் பெண்கள் குறித்த கருத்தாக்கத்தில் மிகமிகப் பிற்போக்கான கருத்துகளையே கொண்டுள்ளன. மீண்டும் மீண்டும் காதல், திருமணம், என்ற அகஉணர்வுகளையே பெண்ணுக்கான முக்கிய வாழ்க்கை

குறிக்கோள்களாக முன்வைக்கின்றன. இதுவே நம்முன்னோர்கள் வகுத்த விதி என்றும் கூறுகின்றனர். உண்மையில் முந்தைய தலைமுறைப் பெண்கள் எவ்வாறு வாழ்ந்தனர். பெண் என்றும் சுயமரியாதையுடனும், சமூக சிந்தனையுடனும் வாழ்ந்ததில்லையா என்ற கேள்விகள் எழுகின்றன. இங்கு பொது வரலாற்றில் பெண் விடுதலை குறித்த அறிதல் இல்லை. பெண்ணின் சுயசார்பு குறித்தபுரிதலும் இங்கு இல்லை. பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் இல்லை. பெண்கள் சமூக மாற்றங்களுக்கு வித்திட்டதைப் பெண்களின் வரலாற்றைப் புரட்சியாக செயல்பட்டதை 'காலக் கனவு' நாடகம்எடுத்துரைக்கிறது. இந்நாடகத்தின் ஆசிரியர் வ.கீதா. இந்நாடகம் அ. மங்கையின் மரபாச்சிக் குழுவினரால் நிகழ்த்தப் பெற்றது. இந்த நாடகத்தில் உள்ள பெண் விடுதலை அரசியலை முன்னிறுத்தும் அடிப்படையிலும், வரலாற்றில் இடம் பெற்ற பல பெண்களைப் பொது வெளிக்கொணரும் வகையிலும் இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கின்றது. சமூகக் கற்பனையில் உள்ள பெண் குறித்த கற்பிதங்களைத் துடைந்தெறிந்து பெண்ணின் சுயத்தை உண்மையை வெளிக் கொணருவது இவ்வாய்வு கட்டுரையின் நோக்கம்.

## பெண் விடுதலை அரசியல்

பெண் விடுதலை அரசியல் என்பது 'பெண் தனக்கான விடுதலை வெளியை அடையப் பாடுபடுவது'. பெண் தன்சுய விடுதலைக்காகத் தான் சந்தித்த போராட்டங்கள், இடர்பாடுகள் அவற்றை எதிர்க் கொண்டவிதம், செயல்பாடுகள் இவையே பெண் விடுதலை அரசியல்.

## பாரதியுகம்

பெண் விடுதலையின் வரலாறுப் பொதுவாகப் பாரதியின் புதுமைப் பெண்ணிலிருந்தே தொடங்குகிறது. ஆனால் பாரதி வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் பல பெண்கள் இதழ்களில் பெண் விடுதலைக் குறித்து எழுதியுள்ளனர். 1916ல் மங்களம், மங்கையர்கரசி ஆகிய இருவரும் புதுவையில் இருந்து வெளிவந்த 'கலைமகள்' பத்திரிகையில் எழுதியுள்ளனர். மங்கையர்கரசி காதல் திருமணத்தை ஆதரித்து எழுதியுள்ளார். அவர் பழைய பழக்க வழக்கங்களில் தீமை உண்டாகிறதே தவிர நன்மை இல்லை. எனவே பெண்கள் தமக்குப் பிடித்த ஆண் மகனையே தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று 1916ல் எழுதியுள்ளார். ஆனால் இன்று இத்தனை ஆண்டுகள் கடந்தும் ஒரு பெண்ணால் தனக்குப் பிடித்த ஆடவனைத் தேர்ந்தெடுக்க இயலாத நிலையே உள்ளது. அவ்வாறு தன் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும் ஆணோ, பெண்ணோ ஆணவக் கொலைக்களுக்கு உள்ளாகப் படுவதையும் செய்திகளில் காண முடிகின்றது. 1930ல் 'மாதர் மறுமணம்' எனும் இதழை மரகதவள்ளி என்பவரும் பெண் கல்வியினை வலியுறுத்தி வெளிவந்த 'தமிழ் மாது' எனும் இதழை ஆசிரியராய் இருந்து சுவப்பனேஸ்வரி என்பவரும் நடத்தியுள்ளனர், இவர் அயோத்திதாசப் பண்டிதரின் ஒருபைசாத் தமிழன் இதழிலும் தொடர்ந்து எழுதிவந்துள்ளார் என்பதை நாடகத்தின் வழி அறிய முடிகிறது. 8-12 வயதுடைய பெண்களை சர்வ சாதரணமாக 25-40 வயதுடைய ஆண்கள் திருமணம் செய்து கொண்டனர். அதனால் கல்வி கற்க எண்ணிய பெண்களால் கூடத்தன் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. அன்றைய பெண்கள் தன் விடுதலை கனவுகளைத் தம்முடைய பெண் குழந்தைகளிடம் இருந்தே செயல்படுத்திக் கொண்டனர். இதனை 'சுப்புலெட்சுமி' அவர்களின் டைரி குறிப்பில் இருந்து குறிப்பிடுகிறது நாடகம். பாரதியின் காலத்தில் பல பெண்கள் பெண் விடுதலைக்கு குரல் கொடுத்துள்ளதால் 'அப்ப இனி மேலும் பெண் விடுதலைக்கு ஒரு புலவன் பாரதி அப்படின்னு சொல்லி இந்த வரலாற்றுக் கணிக்கை அவ்வளவு சுலபமா தீர்க்க முடியாது 'என்ற கருத்தை முன்வைக்கிறது காலக் கனவு நாடகம் (Geetha, 2010). பெண் விடுதலை வரலாற்றின் தொடக்கம் பாரதி மட்டு மல்ல அதற்கு முன்னரே பல பெண்கள் பெண் விடுதலை குறித்துச் சிந்திக்கவும், பேசவும், எழுதவும் தொடங்கியுள்ளனர்.

## கிறித்தவம்

கிறித்தவ பெண்கள் எழுதிய டைரி குறிப்புகள் வாயிலாகவும், கிறித்தவ உபதேசிமார்களின் குறிப்புகள் வாயிலாகவும் பெண் விடுதலைக்குக் கிறித்தவம் முக்கியப் பங்காற்றியதை எடுத்துரைக்கிறது இந்நாடகம். கிரேஸ் சாமுவேல் என்ற பெண் தனது தோழிக்கு எழுதிய கடிதத்திலிருந்து இலட்சிய மண வாழ்க்கை என்னவென்று எங்களுக்கு தெரியும். அந்த அருளார்ந்த இன்பத்தை ஒவ்வொரு கணமும் நாங்கள் அனுபவித்து வருகிறோம். எனக்கு குழந்தைப்பேறு இல்லாமல் போனாலும் உலகம் இன்னும் இன்பமயமானதாகவே உள்ளது, (05.11.1924) இந்த லெட்டர 1924ல்கிரேஸ், சுப்புலெட்சுமிக்கு எழுதுறாங்க. குழந்தைப் பேறில்லாப் பெண்ணின் சிந்தனை 1924லேயே, எவ்வளவு சுயச்சார்பு உடையதாக இருந்துள்ளது என்பதனை இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன (Geetha, 2010). இன்று குழந்தை பேறின்மை என்பது ஒருபெரும் நோயாகச் சித்தரிக்கப்படுகிறது. இதனால் படித்த பெண்கள் படிக்காத பெண்கள் என அனைத்துத் தரப்புப் பெண்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் பல கருத்தரிப்பு மையங்கள் தோன்றிப் பெண்கள் உள, உடல் சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். பிறருக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்த கிளாரிந்தா (1778) பற்றிக் கூறுகிறது இந்நாடகம். இவர் கிணறு வெட்டுதல், கோவில், பள்ளிக்கூடம் கட்டுதல் போன்ற சேவைகளைச் செய்தார் என்பதனை நாடக வரிகளின் வழி அறிய முடிகிறது. 'கிளாரிந்தா தஞ்சையிலிருந்து கொண்டுவந்தச் செல்வச் செழிப்போடையும், என்னென்ன செஞ்சாங்க தெரியுமா? கெணறு வெட்டுனாங்க, கோவிலும் புள்ளைகளுக்கும் பள்ளிக் கூடமும் கட்டுனாங்க, மரியாசவரி யாங்கிற ஒரு பெண் உபதேசிய நியமிச்சாங்க, கத்தோலிக்க புரொட்டஸ் டன்ட் சர்ச்சைகள, அறிவார்ந்த முறையில அனுகுனாங்க' (Geetha, 2010). திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உழைக்கும் பெண்கள் மார்சீலை அணியக் கூடாது என்று மறுக்கப்பட்டது, 'எளிய சாதி பெண்கள் ஆடு, மாடுகளை போல் இடுப்புக்கு மேல எதுவுமின்றி அலைந்து கொண்டிருந்த காலத்தில் - அண்மையில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மேலாடை போட்டு வாழ்ந்த பெண்கள் கூட கன்னியாக்குமரி மாவட்டத்தில் கல்யாணமாகி விட்டதால் மேலாடையை எடுத்து விட வேண்டும் என்ற விதி விலக்கு அல்லாத கொடூரச் சட்டம் இருந்தது'. என்று தனது நூலில் குறிப்பிடுகிறார் (Samuthiram, 1999). கிறித்துவத்திற்கு மாறிய இந்த பெண்கள்மார் சீலை அணிய தொடங்கினார்கள். கிறித்துவம் அந்த உரிமையை அப்பெண்களுக்கு வழங்கியிருந்தது. இதற்கு பிறகு தோ ள்சீலை கழகம் ஏற்பட்டு அனைத்து பெண்களும் ரவிக்கை அணிய உரிமை அளிக்கப்பட்டது. இதற்குகி றித்துவத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. கிறித்துவ உபதேசிகளாகிய பெண்கள் ஊர் ஊராக சென்று எளிய பெண்களுடன் அமர்ந்து அவர்களது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டனர். பெண்கள் மேலே படிப்பதற்கும் சமூக சேவையில் ஈடுபடுவதற்கும் இவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாய் அமைந்திருந்தது. மேலும் தேவதாசிகளாக இருந்தபல பெண்களைக் காப்பாற்றி உள்ளனர். இதனைப் பற்றி எந்த வரலாறும் கூறவில்லை என்ற கருத்தினை முன்வைத்துள்ளது இந்நாடகம்.

## தேவதாசிமுறை ஒழிப்பு

தேவதாசிப் பெண்களின் வாழ்க்கைக்காகப் பல பெண்கள் மறுவாழ்வு மையங்களை நடத்தியுள்ளனர். யமுனை பூர்ண திலகம்மா என்பவர் 'யுவதி சரணாலயம்' என்ற அமைப்பை நடத்தியிருக்கிறார். தேவதாசி முறையை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்று மிகத்தீவிரமாகப் போராடியவர்கள் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் மற்றும் டாக்டர் முத்து லெட்சுமி. ராமாமிர்தம்மாள் தன்னுடைய சொந்த அனுபவங்களைக் கூறி இம்முறையிலிருந்து வெளிவருமாறு பிரச்சாரம் செய்துள்ளார். தாசிப் பெண்கள் திருமணம் செய்யக் கூடாது என்ற விதியை எதிர்த்து 'சுயம்பு பிள்ளை' என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்துக் கொண்டார். தேவதாசி முறையை எதிர்த்த தற்தகாகப்பல இன்னல்களையும் சந்தித்தார். அனைத்தையும் எதிர்த்து அஞ்சாமல் தேவதாசி முறை எதிர்ப்புக்காக போராடினார்.

தாசி குலத்தில் பிறந்து மருத்துவம் படித்து 'முதல் பெண் மருத்துவர்', 'முதல் சட்டமன்ற உறுப்பினர்' என்ற பெருமைக்குரியவர் டாக்டர் முத்துலட்சுமி. 'எவ்வளவு தான் கீழ்த்தரமான வாழ்க்கையை ஒரு பெண் வாழ்ந்தாலும் அவளுக்கென்று மனித உரிமை உள்ளது'. அவளது இந்த

உரிமையை உள்ளார்ந்த சுதந்திரத்தை நாம் மதித்தாக வேண்டும் அரசாங்கத்தின் உதவியோடு சட்டம் கொண்டு வந்தார் எப்படியும் தேவதாசி முறையை ஒழித்து விட முடியும் என்று ‘தையல் கலை’ என்ற பத்திரிக்கையில் எழுதினார் (Geetha, 2010). ‘சட்டச் சபையில் இது தொடர்பாக விவாதம் நடைபெற்றபோது தியாக சீலர், நாவலர் தீரர் சத்தியமூர்த்தி இந்த தேவதாசி முறை என்பது தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கமும் வழக்கமும் ஆகும். அதனைச் சட்டம் கொண்டு தடுக்கக் கூடாது என்று சாதுரியமாக பேசினார். தீரர் சத்திய மூர்த்தி அவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையில், இந்த தொன்று தொட்டு உள்ள பழக்கத்திற்கு இதுகாறும் இருந்து வந்த எங்கள் குலப் பெண்கள் செய்தது போதும், அப்படி வேண்டுமென்றால் இனி, உங்கள் குலப்பெண்கள் செய்யவும், அதனால் உங்கள் பெண்களே மோட்சப் பிராப்தி பெறவும் அனுமதி வழங்களாமே’ என அதிர்ந்து பேச அவையே அமைதியானது. அயராது முயற்சிகளை மேற்கொண்ட அம்மையாருக்கு வெற்றி கிடைத்தது. சட்டத்தினை 1929ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் அமல்படுத்திட முடிந்தது. அவருடைய எண்ணம் செயல் அனைத்தும் தேவதாசி முறை ஒழிப்பதற்கும், அவர்களின் நலனுக்காகவுமே அமைந்திருந்தது (Dhavathiru Dhayantha Sekaran, 2010).

## திரையுலகில்பெண்கள்

1920 கள் மற்றும் 30களில் திரையுலகில் பல பெண்கள் வருகை புரிந்தனர். சாதனை படைத்த பல பெண்கள் கதையும் திரையில் வந்தது. மின்னல்கொடி, வீராமனி, டுபானகுயின் என்ற பட்டப் பெயர்களுடன் பெண்கள் கத்திச் சண்டை போட்டு அனைவரையும் வியக்க வைத்தனர். இராட்டை சுத்தி, சொந்த வாழ்க்கையைத் தியாகம் செய்பவர்களாக, காதல் வாழ்க்கையைத் துறக்கும் சமூக சேவகிகளாகவும் பெண்கள் திரையுலகில் அறிமுகப் படுத்தப்பட்டார்கள். திரையுலகில் அனுபவித்த இவர் காந்தி கேட்டுக் கொண்டதற்கிணங்க தேச விடுதலை, சமூக முன்னேற்றம், ஹரிஜன முன்னேற்றம் எனப் பல தலைப்புகளில் பாடியுள்ளார்.

## இயக்கங்களில் பெண்கள்

காந்தியின் தேசிய இயக்கத்தில் படித்த பெண்கள், விதவைப் பெண்கள், குடும்பப் பெண்கள் எனப் பலரும் பங்கேற்றனர். இவர்கள் வீதிக்கு வந்து மறியல் செய்தல், அந்நியப் பொருட்களை எரித்தல், காலனியச் சட்டங்களைக் கேள்வி கேட்டல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். கதர் இயக்கத்தில் பங்கேற்கும் பெண்களுக்கு விடுதிகள் கட்டியும், அரிசன ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சேவையை மேற்கொண்டும் பல தொண்டுகள் புரிந்துள்ளனர். காந்தியின் ஆளுமை பல பெண்களுக்கு புத்துயிர்ப்பு அளிப்பதாக அமைந்திருந்தது. தனித்தமிழ் இயக்கத்திற்கு முக்கியமான பங்காற்றியவர் நீலாம்பிகை அம்மையார். இவர் மறைமலை அடிகளாரின் மகள். இவருக்கு மொத்தம் 7 குழந்தைகள். இவர் சளைக்காமல் தொடர்ந்து படித்தும் எழுதியும் இயக்கங்களில் செயல்பட்டு உள்ளார். இதனை செய்வதற்குத் தேவையான தன்னம்பிக்கையும் பண்பாட்டு வெளியும் அன்றைக்குப் பலதளங்கள் மூலமாக பெண்களுக்கு கிடைச்சிருச்சு என்பது மட்டும் குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியப் பெண்ணான சித்தி ஜீனைதா பேகம் நவயுவன் பத்திரிக்கையில் ‘இஸ்லாமியப் பெண் கல்வியில் பின்தங்கி இருக்க காரணம், என்ன என்பதைக் குறித்து எழுதியுள்ளார். ‘தன்னலப் பேய் பிடித்த பலர் பொருள் தெரியாது, குரான் ஓதுதலே அறிவளிக்கும் எனப்பல ஆண்டுகளாகக் கூறி இஸ்லாமியப் பெண்களை ஏமாற்றி அவர்களை விலங்குகளுக்கு சமமாக வைத்திருப்பதே காரணம் என்றால் மிகையாமோ’ என்கிறார், மேலும் 1955ல் ‘நூருல் இஸ்லாம்’ எனும் இதழில் பெண்ணுக்கென்றுத் தனியான ஆன்மா உண்டு. அவள் தெய்வம் அவள் கணவர் அல்ல என்றும் குறிப்பிடுகிறார்.

பொதுவுடைமை இயக்கத்தில் பல பெண்கள் கலந்து கொண்டு, உழைக்கும் மக்களுக்கான போராட்டத்தில் கலந்து கொண்டனர். கே.பி ஜானகியம்மாள், ருக்மணி அம்மாள், மீனா கிருஷ்ணசாமி போன்றோர். காந்தியம், கம்யூனிசம், சுயமரியாதை இயக்கம் என எல்லா இயக்கங்களுடனும் தொடர்பு

கொண்டிருந்தவர் மணலூர் மணியம்மாள். இவர் மக்கள் போராளி. விவசாய சங்கத் தலைவர். இவர் ஒரு இளம் விதவை. வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கவில்லை. தன் முடியைக் கிராப்பாக வெட்டிக் கொண்டார். சிலம்பம் கற்றுக் கொண்டு வேட்டி அரைக்கை கதர் சட்டை சிவப்புத் துண்டோடு சைக்களில் வலம் வந்தார். நிலச் சுவான்தாரர்களோடு கூலி உயர்வு கேட்டுப் போராடினார். 1949ம் ஆண்டு மன்னார் குடியில் நடந்த ஒரு கூட்டத்தில் மணியம்மா அவர்கள் பேசிய பேச்சின் சாராம்சம். 'தாழ்த்தப்பட்டவர்கள், இந்த உழைப்பாளி மக்கள சவுக்கால அடிக்கிறாங்க, சாணிப்பால் குடிக் கவைக்கிறாங்க, பெண்கள் உடல் ரீதியா அவமானப் படுத்துறாங்க'. பண்ணையாருங்க சவுக்கப் பிடுங்கி திரும்ப விளாசுங்க அப்பதான் முடிவு கிடைக்கும் என்று கூறுகிறார்.

சுயமரியாதை இயக்கத்தில் பல பெண்கள் தீவிரமாக செயல்பட்டனர். 1934 புரட்சி இதழில் எழுதிய ஜெயகேசரி, 'பெண்களே உலகின் முதல் பாட்டாளிகள் என்றார்'. நீலாவதி அம்மையார் மேதினம் பெண்களுக்கான தினம் என்று அறிக்கை கொடுத்தார். 1931ம் ஆண்டு மாநாட்டில் விசாலாட்சி அம்மையார் செறிவான உரை நிகழ்த்தியபோது 14வயது தான். 1930களில் குடிஅரசு இதழில் 'பெண் இனநல்லார்' எனும் பெயரில் ஒருவர் எழுதியுள்ளார். பெரியார் என்ற ஆளுமை சுயமரியாதை இயக்கப் பெண்களுக்கு மிகப் பெரிய விஷயமாக இருந்துள்ளது. கற்பு, திருமணம் குறித்து அவர் பேசிய பல முற்போக்கான கருத்துகள் பெண்களை எழுச்சியடைய வைத்தது. சுயமரியாதை இயக்கப் பெண்கள் குடியரசு, புரட்சி இதழ்களில் சாதி, மதம் அனைத்தையும் விமர்சித்து எழுதியுள்ளார்.

1920க்கும் முன்பும் பின்பும் சில பெண்மணிகள் பொதுமேடையேறிச் சொற்பொழிவாற்றியிருந்தனர். அத்தகைய சிலரின் பெயர்கள் வருமாறு இந்திராணி பாலசுப்பிரமணியம், விசாலாட்சி சுப்பையா, பண்டிதை அசலாம்பிகை அம்மையார், ஆழ்வார் நாயகி அம்மையார், பண்டிதை கிருஷ்ண வேணி அம்மையார், டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார், அலர்மேல் மங்கை தாயாரம்மாள், தி. நீலாம்பிகை அம்மையார், டாக்டர் எஸ். தருமாம்பாள் என ஒரு பட்டியலே தொடருகிறது (Thirunavukkarasu, 1991).

'குஞ்சிதம், இந்திராணி, நீலாவதி, கண்ணம்மாள், அன்னபூரணி, இராமாமிர்தம், மரகதவள்ளி, ரங்கநாயகி, விசாலாட்சி, பொன்னம்மாள், சுந்தரி, அஞ்சுகம், சிவகாமி, மேரி, மகாலட்சுமி, மஞ்சுளாபாய், வள்ளியம்மை, சிலோச்சனா, சிதம்பர அம்பாள், மீனாட்சி, கிரிஜாதேவி, பினாங்கு ஜானகி, ஆண்டாளம்மா' போன்றோர் பெண்விடுதலைக்காகப் பல கோரிக்கைகளை சுயமரியாதை இயக்க மாநாட்டில் முன்வைத்தனர் (Geetha, 2010). சீர்திருத்தம் பேசிய பல ஆண்களுக்கும் ஆணாதிக்கச் சிந்தனை இருந்ததை மனோகரம், நீலாவதி அம்மையார் ஆகிய இருவரும் 'புதுவை முரசு' மலரில் எழுதி உள்ளனர். இவ்வளவு தீவிரமாக, முற்போக்காகப் பேசிய போது வெளி இன்று இல்லை. இவ்வளவு முற்போக்கானப் பெண்கள் இருந்துள்ளனர் என்ற செய்தி கூட பொது வரலாற்றில் இடம் பெறவில்லை. இந்த பொது வரலாறு தெரியாத காரணத்தால் மீண்டும் மீண்டும் பெண்களை அறிவுரீதியாகச் சிந்திக்க விடாமல் உணர்வுப் பூர்வமாகக் கட்டுப்படுத்தி வைக்கும் நிலை தொடர்கிறது.

## முடிவுரை

பாரதியின் காலத்திலேயே பெண்கள் பெண்விடுதலைக்குக் குரல் கொடுத்துள்ளனர். பல பெண்கள் இதழ்களில் எழுதியும், ஆசிரியராகத் தீவிரமாக செயல்பட்டும் வந்துள்ளனர் என்பதனை அறியமுடிகிறது. பெண்விடுதலைக்குக் கிறித்தவத்தின் பங்களிப்பு, தோள் சீலைக் கலகம், இடதுசாரி இயக்கப் பெண்களின் போராட்டங்கள், மணலூர் மணியம்மாவின் குறிப்புகள் போன்றவை பொது வரலாற்றில் எங்கும் பதிவு செய்யபடவில்லை என்பதை நாடகம் எடுத்துரைக்கிறது. பாரதி, பெரியார், காந்தி போன்ற ஆளுமைகள் வெளி உலகிற்கு வந்த அளவுக்கு அவர்கள் காலத்தில் தீவிரமாக இயக்கங்களில் செயல்பட்டு வந்த பெண்களின் உழைப்பு இருட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இன்றும் இந்த அவலம் தொடர்ந்து நீடிக்கிறது. சமூகத்தில் உழைக்கும் பெண் போராளிகள் அவர்களின் செயல்பாடுகளைப் பற்றி எந்த ஊடகங்களும் முன்வைப்பதில்லை. பொது ஊடகங்களில் வெளியிடப்படும் நிகழ்ச்சிகள் கலந்துரையாடல் போன்றவையும் மக்களைச் சிந்திக்க விடாமல்

அமைபவையாகவே உள்ளன. அவ்வகையில் பெண்களின் பங்களிப்புகள் இருட்டடிப்புக்கு உள்ளாகின்ற அவலம் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆய்வு நூலக வெளியிட வேண்டிய தரவுகளைக் கொண்டு வ. கீதா காலக்கனவு எனும் நாடகத்தை படைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. நாடகத்தில் பார்வையாளர்களையும் ஒன்றினைத்துப் பங்கேற்கச் செய்த்து. வரலாற்று பெண்களுடன் உணர்வுப் பூர்வமாக ஒன்றினைய வைத்தது.

## References

Dhayanantha Chandhira Sekaran, (2010) Maadhar Kula Maanickam Padhmapooshan Doctor Muthulakshmi Reddy Thilagavathiyar, Shivayanama Publications, Pudukkottai, India.

Geetha, V. (2010) Kaalakkanavu (Penniya varalatru Aavana Naadagam), Adaiyalam Publications, Trichy, India.

Samuththiram, S. (1999) Samuththiram Katturaigal, Aegalaivan Publicatios, Chennai, India.

Thirunavukkarasu, (1991) Dhiravida Iyakka Vergal, Nakkeeran Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License